
# ஆடம்பர கார்களின் சக்கரங்கள் பூட்டப்படுவதில்லையா?

கோலாலம்பூர், நவ. 17- பங்சாரில் விலை யுயர்ந்த அல்லது ஆடம்பர கார்களின் சக்கரங்களை மாநகர மன்றம் (டி.பி.கே.எல்.) பூட்டுவதில்லை என குற்றச்சாட்டும் ஒரு காணொளி பதிவு வைரலானதைத் தொடர்ந்து, பார்க்கிங் வரம்புமீறல்களுக்கு எதிராக பாரபட்சமான அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்ற கூற்றை டி.பி.கே.எல். மறுத்துள்ளது.

## டி.பி.கே.எல். மறுப்பு




பங்சார், ஜாலான் தெலாவி பகுதியிலிருந்து நவம்பர் 11 ஆம் தேதி வெளியிடப்பட்ட காணொளி குறித்து கருத்துரைத்த டி.பி.கே.எல்., தன் அமலாக்க அதிகாரிகள் எந்தவொரு தரப்புக்கும் சிறப்பு சலுகை காட்டுவதில்லை என்று கூறிற்று.

அன்றைய தினம், ஒரு பெரோடுவா பெஸா கார் உட்பட 13 வாகனங்களின் சக்கரங்கள் பூட்டப்பட்டன. ஜாலான் தெலாவி 4 இல் கியூ பிஸ்ட்ரோ அருகே பிற்பகல் 1.09 மணிக்கு பெஸாவின் சக்கரம் பூட்டப்பட்டு 1.30 மணிக்கு அகற்றப்பட்டது என்று அது விவரித்தது.

காணொளி பதிவில் மற்ற வாகனங்களின் சக்கரங்கள் பூட்டப்படாமல் இருந்ததை கண்டு ஆச்சரியமடைந்திருக்கலாம். டி.பி.கே.எல்.லின் எஸ்.ஓ.பி.படி ஓட்டுநர் அமர்ந்துள்ள வாகனங்களில் சக்கரம் பூட்டப்படாது. மாறாக காரை அங்கிருந்து அகற்றுமாறு ஓட்டுநர் கேட்டுக் கொள்ளப்படுவார் என்று டி.பி.கே.எல். ஓர் அறிக்கையில் கூறிற்று.

கூறப்படுவதை போல் டி.பி.கே.எல். இரட்டை நிலை எடுக்காமல் நியாயமாக நடவடிக்கை எடுக்கும் என்று அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருக்கிறது.